# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடம்

## மின்னியலாளர் பதவி - (Post of Electrician)

| | | |
|---|---|---|
| கல்வித் தகைமைகள் | : | க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |
| தொழில்சார் தகைமைகள் | : | பதவிக்கு ஏற்புடைய மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமை சான்று 4ஆம் மட்டத்திற்குக் (NVQ 4) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும். |
| வயது | : | 18 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br>மற்றும்<br>உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |
| சம்பளக் குறியீடு | : | PL2 - தரம் III |
| சம்பள அளவு | : | I. ரூபா 57,700 - 10x650-64,200 (2027-01-01ஆம் திகதியில் சம்பளம்)<br>II. மேற்கூறிய சம்பளத்திற்கு மேலதிகமாக சகல அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்) |
| சேவை நிபந்தனை | : | நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமை உண்டு. |

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனக் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும்/ வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை நிர்வாகச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2026-03-03ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**